தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723
[Impact Factor: 9.47] Monthly, Peer-Reviewed, Refereed, Indexed Journal with IC Value : 86.87
Volume - 1, Issue - 09, June - 2025

DOIs: https://doi.org/10.63300/tmxxxxxxxxxx --:-- Research Paper

Lullabies found among Muslim people A content-based study

M.A. Zimra[1], Mrs. MIF.Safna[2],
[1 & 2] Lecturer in Tamil, Department of Languages, Faculty of Atrs and Culture, SEUSL,
South Eastern University of Sri Lanka.

Abstract: *Tamil folk songs are a significant aspect of a nation's character, faith, and lifestyle. Tamil folk songs have a unique identity. These songs express various aspects such as the love for mother, beauty of a child, future dreams, social issues, and so on. Folk songs are also prevalent among the Tamil-speaking Muslim community. However, there is a lack of studies on their unique attributes. This research aims to analyze the attributes of folk songs among Tamil-speaking Muslims. From the selected collection of songs, an analysis of their common elements, Islamic religious and cultural references, social beliefs, language, and so on will be conducted. This study will highlight how Islamic religious beliefs and unique cultural practices of mothers are intertwined with the universal characteristics of Tamil folk songs. Thus, it provides an in-depth understanding of the cultural and behavioral aspects of Tamil Muslims.*

Key Words: *Customs, beliefs, family, civilization, society*

முஸ்லிம் மக்கள் மத்தியில் காணப்படும் தாலாட்டுப் பாடல்கள் - உள்ளடக்க ரீதியான ஓர் ஆய்வு

M.A. சிம்ரா[1], திருமதி. MIF. சஃப்னா[2],
[1&2] விரிவுரையாளர், தமிழ் மொழித்துறை, கலை மற்றும் கலாச்சார பீடம், தென்கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை.

Abstract: *இலக்கியங்கள் ஒரு சக்திவாய்ந்த கண்ணாடியாகச் செயல்படுகின்றன, அவை உருவாக்கப்பட்ட காலங்களின் சிக்கலான சமூக மற்றும் பண்பாட்டு இயல்புகளைப் பிரதிபலிக்கின்றன. இலக்கியத்தின் ஒரு அடிப்படைப் பண்பு என்னவென்றால், அதன் இயங்கும் தன்மைதான்; இது அதன் சூழலுக்கும் காலத்தின் ஓட்டத்திற்கும் ஏற்ப இயற்கையாகவே வளர்ந்து வருகிறது. இது ஒரு கலனாகச் செயல்பட்டு, ஒரு சமூகத்தின் பண்பாட்டு மரபைச் சுமந்து, வெளிப்படுத்தி, அதன் விழுமியங்கள், கவலைகள் மற்றும் அபிலாஷைகள் குறித்த நுண்ணறிவுகளை வழங்குகிறது. ஒரு சமூகத்தின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் மற்றும் நடைமுறைகள் ஆழமாக வேரூன்றியவை, இவை பெரும்பாலும் மனிதகுலத்தின் விடியலுக்கே பின்னோக்கிச் செல்கின்றன. மனிதர்கள் நாடோடி வாழ்க்கையிலிருந்து நிலையான சமூகங்களாக மாறியபோது, குடும்ப அமைப்பு ஒரு நிலையான மனித சமூகத்தின் அடித்தளமாக அமைந்தது. இந்த ஆரம்ப சமூகங்களுக்குள், தனிப்பட்ட பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் படிப்படியாக கூட்டு மனசாட்சியில் ஊடுருவி, பண்பாட்டு அமைப்பை வடிவமைத்தன. பண்டைய தமிழ் நாகரிகம் இந்தச் செயல்முறைக்கு ஒரு சான்றாக நிற்கிறது, இது மனித வரலாற்றில் அறியப்பட்ட பழமையான நாகரிகங்களில் ஒன்றாகும். தமிழ்நாட்டிற்குள், வளமான வேளாண் நிலங்களில் வசிப்பவர்களான மருத நில மக்கள், தங்கள் சூழலுடனும் வாழ்வியல் முறையுடனும் பிரிக்கமுடியாமல் இணைக்கப்பட்டிருந்த தனித்துவமான பழக்கவழக்கங்களையும் நம்பிக்கைகளையும் வளர்த்தெடுத்தனர். இந்தக் கட்டுரை எட்டு விரிவான தொகுதிகளில் மருதப் பண்பாட்டின் வளமான அமைப்பை ஆழமாக ஆராய்கிறது, அதன் பல்வகைப்பட்ட அம்சங்களை ஆய்ந்து வெளிப்படுத்துகிறது. இது மருத மக்களைத் தனித்துவப்படுத்திய மரபுகள், சடங்குகள், சமூகக்*

கட்டமைப்புகள் மற்றும் உலகக் கண்ணோட்டம் ஆகியவற்றின் விரிவான ஆய்வை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, இவை தமிழ் நாகரிகத்தின் செழுமையான பன்முகத்தன்மைக்கு பங்களித்தவை. மருதப் பண்பாட்டைப் புரிந்துகொள்வதன் மூலம், பண்டைய தமிழ் சமூகத்தின் நுணுக்கங்களையும் நீடித்த பாரம்பரியத்தையும் இன்னும் ஆழமாகப் புரிந்துகொள்கிறோம். மனிதன் குடியேறி குடும்ப அலகுகளாக ஒன்றிணைந்து, சமூகக் கட்டமைப்புகளை உறுதியாக்கியது போலவே, அவர்களின் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் உறுதியடைந்து, அவர்களின் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் ஊடுருவின. மருத மக்களின் தாக்கமும் அவர்களின் பங்களிப்பும் ஒரு முழுமையான மற்றும் மரியாதைக்குரிய ஆய்வுக்குத் தகுதியானது.

குறிப்பு சொற்கள் *: பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், குடும்பம், நாகரிகம், சமுதாயம்.*

1. அறிமுகம் (Introduction):

1.1 ஆய்வின் பின்புலம் (Background of the Study) தாலாட்டுப் பாடல்கள் உலகெங்கிலும் உள்ள சமூகங்களில் காணப்படும் ஒரு தொன்மையான வாய்மொழி இலக்கிய வடிவமாகும். இவை குழந்தையின் அழுகையை நிறுத்தி உறங்க வைக்கும் கருவியாக மட்டுமன்றி, சமூகத்தின் மரபுகள், நம்பிக்கைகள், கனவுகள், தாய்மையின் உணர்வுகள் ஆகியவற்றை அடுத்த தலைமுறைக்கு கடத்தும் ஊடகமாகவும் செயல்படுகின்றன. தமிழ் நாட்டார் வழக்காற்றில் தாலாட்டுக்குச் சிறப்பான இடம் உண்டு. தாய் அல்லது பாட்டி பாடும் இப்பாடல்கள் குழந்தையின் நலன், வளர்ச்சி, எதிர்காலம் குறித்த ஆசைகளையும், குடும்ப உறவுகள், சமூகப் பழக்கவழக்கங்கள் பற்றிய குறிப்புகளையும் கொண்டிருக்கும்.

1.2 சிக்கல் கூற்று (Problem Statement)

பொதுவான தமிழ் தாலாட்டுப் பாடல்கள் குறித்து பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால், தமிழ் பேசும் சமூகங்களுக்குள் வாழும் பல்வேறு சமய மற்றும் பண்பாட்டுக் குழுமங்களுள், அவர்களின் தனித்துவமான சமய, பண்பாட்டுக் கூறுகளைத் தாங்கி நிற்கும் தாலாட்டுப் பாடல்கள் குறித்த விரிவான ஆய்வுகள் போதுமானதாக இல்லை. குறிப்பாக, தமிழ் பேசும் முஸ்லிம் சமூகத்தினரின் தாலாட்டுப் பாடல்கள் பொதுவான தமிழ் தாலாட்டுப் பண்புகளிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றன அல்லது தனித்துவமான இஸ்லாமிய மற்றும் பண்பாட்டுக் கூறுகளை எவ்வாறு உள்ளடக்கியுள்ளன என்பது குறித்த உள்ளடக்க ரீதியான ஆய்வு அவசியமாகிறது.

1.3 ஆய்வின் நோக்கம் (Objectives of the Study)

இந்த ஆய்வு ஆனது பின்வரும் முக்கிய நோக்கங்களைக் கொண்டுள்ளது:

- தமிழ் பேசும் முஸ்லிம் சமூகத்தினரிடையே வழக்கில் உள்ள தாலாட்டுப் பாடல்களைச் சேகரித்தல்.
- சேகரிக்கப்பட்ட பாடல்களிலுள்ள பொதுவான கருப்பொருட்களை இனங்காணல்.
- இப்பாடல்களிலுள்ள இஸ்லாமிய சமயக் கூறுகள் (அல்லாஹ், நபிகள், துஆக்கள் போன்றவை) மற்றும் குர்ஆன், ஹதீஸ் சார்ந்த குறிப்புகளை ஆராய்தல்.
- இப்பாடல்களில் காணப்படும் தமிழ் முஸ்லிம்களின் தனித்துவமான பண்பாட்டுக் கூறுகளை (உடை, உணவு, சடங்குகள், உறவுகள் போன்றவை) கண்டறிதல்.
- தாலாட்டுப் பாடல்கள் வழியாக பண்பாட்டு மற்றும் சமய விழுமியங்கள் எவ்வாறு கடத்தப்படுகின்றன என்பதைப் பகுப்பாய்வு செய்தல்.

முன்னுரை

தாயானவள் தனது பிள்ளையை ஆரோக்கியமுள்ள குழந்தையாக மட்டுமன்றி சமூகத்திற்கு நற்பிரஜையாகவும் வளர்க்க விரும்புகிறாள். தாய் என்பவள் தன் பிள்ளைகளுக்கு முதல் ஆசானாவாள். எல்லா விடயங்களையும் தனது பிள்ளைக்குக் கற்றுக் கொடுப்பாள். அந்தவகையில் குழந்தையை உறங்க வைப்பதற்காக தாயால், தந்தையால், பாட்டியால் அல்லது வேறு ஒருவரால் பாடப்படும் பாடலே 'தாலாட்டு' ஆகும். தாலாட்டு தொடர்பாக பல அறிஞர்கள் பலவேறு கருத்துக்களைக் கூறியுள்ளனர். அந்தவகையில்,

"தாய்மை உலகிற்கு வழங்கிய முதல் இலக்கியப் பரிசுதான் தாலாட்டு"
எனக் தமிழண்ணல் கூறியுள்ளார்.

உலகிலுள்ள அனைத்தையும் விட பிள்ளைப் பாசமே ஆழமானது; வலிமைமிக்கது; அழகானது; உணரச்சிகரமானது. இத்தகைய பாசத்தின் விளைவாகத் தான் தாலாட்டுப் பாடல் தோற்றம் பெற்றிருக்கலாம். மேலும் தாலாட்டில் பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். அந்தவகையில், தாய்மையின் தவிப்பு, குழந்தை பற்றிய எதிர்பார்ப்புக்கள், இறைவனின் இனிய நாமங்கள், வரலாற்றுச் சம்பவங்கள் மற்றும் பிள்ளைகளுக்கான அறிவுரைகள் போன்ற இன்னோரன்ன விடயங்களைக் கொண்டமையப் பெற்றுள்ளன.

தாலாட்டு என்ற சொல்லை தால்+ஆட்டு எனப் பிரிக்கலாம். தால் என்றால் நாக்கு எனப்படும். நாவை ஆட்டிப் பாடுவதாலேயே தாலாட்டு எனப் பெயர் பெற்றிருக்க வேண்டும். குழந்தை பசியினால் அல்லது பயத்தினால் அழும்போது தாய்மை விழிப்படைந்து கொள்கிறது. அப்போது தாய் மனதில் ஏற்படும் பாசவுணர்வு குழந்தையை சமாதானப்படுத்தும் நோக்கில் தாலாட்டாக பிரதிபலிக்கின்றது. தாலாட்டுப் பாடலுக்கென்று எவ்வித இலக்கண மரபும் கிடையாது.

பொதுவாக தாலாட்டுக்கள் குழந்தையைப் பற்றியதாகவே இருக்கின்றன. அத்தோடு குழந்தையைச் சார்ந்தவர்கள் பற்றியும் ஒரு சில தாலாட்டுப்பாடல்கள் அமையப்பெற்றுள்ளன. அதாவது, "குழந்தைக்காக தாய் அடைந்த துன்பம், தாய் புரிந்த பிரார்த்தனைகள், குழந்தையின் உறவினர் செய்த உதவிகள், அதன் வருங்கால வாழ்வின் தன்மைகள் என்பன பற்றியெல்லாம் தாலாட்டும் போது தாய் கூறிக்கூறிக் குழந்தையை உறங்க வைப்பது வழக்கமாகும்." மேலும் "தெய்வங்களை வருந்திப் பாடுவதும் (வரவழைத்து), தாய்மாமன் சிறப்பு, பிறந்த வீட்டின் பெருமை, குழந்தையின் எதிர்காலம் ஆகியவை குறித்த செய்திகள் தாலாட்டில் இடம்பெறுகின்றன."

குழந்தைகள் அழும்போது அவர்களை அமைதிப்படுத்தி உறங்கச் செய்வதற்காக தங்கள் தோள்களில் தூக்கிப்போட்டு அணைத்தபடியும், தரையில் உற்கார்ந்து கால்களை நீட்டிப்போட்டு அக்கால்களுக்கிடையில் குழந்தையை மல்லாக்காக வளர்த்தியும், வீடுகளில் போடப்பட்டிருக்கும் பலகை ஊஞ்சலில் இருந்து மடியில் வைத்தும் தாலாட்டுப் பாடுவார்கள்.

தாலாட்டுப் பாடல்கள் ஒரே மாதிரியான இசைவடிவிலேயே ஆரம்பமாகித் தொடர்ந்து செல்வதை அவதானிக்கலாம். அத்தோடு தாலாட்டு பாடும் தாய்க்கு கால வரையறை கிடையாது. தாய், குழந்தை அழுகையை நிறுத்தும் வரை தாலாட்டை தன் விருப்பப்படி இசைத்துக் கொண்டே இருப்பாள். இது தாய்மைக்கு வழங்கப்பட்ட ஒரு கொடை என்றே சொல்ல வேண்டும்.

தாலாட்டுப் பாடலில் முதல் வரிகள் சொற்களைக் கோர்த்ததாக அமையப் பெறுவதில்லை. முதல் இரண்டு வரிகளும் அனேகமாக பொருளற்ற சொற்களைக் கொண்டமைந்த ஓசையாகவே காணப்படுகின்றன. தாலாட்டுப் பாடல்கள் பிரதேசத்திற்கு பிரதேசம் மாறுபடுகிறது. மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகிறது. ஒரே மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் ஒரே வகை ஒலிக்கூறுகளைக் கையாள்வதில்லை. அந்தவகையில், ஈழத்தில் பாடப்படும் தாலாட்டுப் பாடல்களின் ஆரம்ப வடிவம் வேறுபடுவதை பின்வருமாறு நோக்கலாம்;

'ஆராரோ...... ஆரிவரோ......'
'ஓரோரோ...... ஓகண்டே......'
'ஆரா...... பாரா...... ராராரோ...'
'ராராரோ...... ராரிரரோ...'

எனவே இவ்வாறு பாடிவரும் தாலாட்டு, கிராமத்துக்கு கிராமம், சாதிக்குச் சாதி, மதத்துக்கு மதம் வேறுபட்டாலும் பெரும்பாலானவை பொதுவான சொற்களைக் கொண்டே ஆரம்பிக்கப்படுகின்றன. மேலும் தாலாட்டின் பாடற்பொருளை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்து நோக்கலாம் என்று சு. சக்திவேல் குறிப்பிடுகிறார்.

- "குழந்தையைப் பற்றியவை
- குழந்தைக்குரிய கருவிகளைப் பற்றியவை
- குழந்தைகளின் உறவினர்கள் பற்றியவை என்பனவாகும்."

இவரது கருத்துப்படி தாலாட்டுப் பாடல்கள் பெரும்பாலும் பெண்களால் அதாவது தாயால் பாடப்படுகின்றன. பெண்கள் தாய்வீட்டுச் சீதனத்தோடு கணவன் வீட்டிற்குத் தாலாட்டையும் கொண்டு வருகின்றனர் என்றே கூறலாம். குழந்தையை உறங்க வைப்பதற்கு மட்டுமல்லாமல் தாயின் மனச்சுமையை இறக்கி வைக்கவும் இத்தாலாட்டு உதவுகிறது. மக்கள் மனதில் உள்ள எண்ணங்கள், நம்பிக்கைகள், இன்ப-துன்பங்கள் ஆகிய அனைத்தையும் தாலாட்டுப் பாடல்களின் மூலம் அறிந்து கொள்ளலாம்.
தற்காலத்தில் நாட்டார் பாடலாகத் தாலாட்டுப் பாடல்கள் அதிகமாகக் காணப்படாத போதிலும் குழந்தையை அரவணைப்பதற்காக ஒருசில தாலாட்டுப்பாடல்கள் கிராம மக்களிடத்தே காணப்படுகின்றன என்றே கூறவேண்டும். அவை ஒவ்வொரு சமயத்திற்கும் இடையில் வேறுபடுவதைக் காணலாம் அந்தவகையில் ஈழத்து முஸ்லிம்கள் மத்தியில் காணப்படும் ஒருசில தாலாட்டுப்பாடல்களையும் அவை கூறும் விடயங்களையும் நோக்குவோம். எடுத்துக்காட்டாக;

"ஆராரோ ஆராரோ ஆரென்பது ஆராரோ – நீ
அரையிலெழுந்ததென்று பொறுந்திக்
கொள்வாய் நித்திரியே
நீ ஏன் அழுதாய் மகளே

நீ ஏன் அழுதாய் கண்மகளே - இதெல்லாம்
உனக்கில்லை என்று பால் வடிய
சித்திரை கொண்டாடுவாய் மகளே
(ஆராரோ)
ஆராற்றும் சீராற்றும்
துஆ செய்மா சைத்தான விட்டு
பால் ஆட்டி தவுலவதுல
பயனைப் பெற்றுக் கொள்வாய் புத்திரியே
(ஆராரோ)
இவ்வுலகில் சீராய் தீனைத் தன்தோனே
சிறப்பாய் அல்லாஹ்வ வேண்டி
நித்தம் புகழ்வாய் என்மகளே
பஞ்ச வர்ணத் தொட்டில் மீது
பாங்காய் அழுவாய் மகளே
(ஆராரோ)
யாரோ எவரோ இவ்வுலகில்
ஊரால வந்த என் மகளோ – நீ
அரசாலுங்கோ மகளே
பஞ்ச வர்ணத் தொட்டில் மீது – நீ
பாங்காய் ஆடுவாய் என் மகளே”
(ஆராரோ)

இப்பாடலானது பெண் குழந்தைக்குப் பாடப்பட்டதாக அமையப்பெற்றுள்ளது. அதாவது இப்பாடலில் கையாண்டுள்ள ‘என் மகளே’, ‘கண் மகளே’ எனும் சொற்கள் இதற்கு சான்றாகும்.

மேலும் இத்தாலாட்டுப் பாடல் குழந்தைக்கு இஸ்லாமிய சமயத்தைப் புகட்டும் வகையிலும் அதைத் தொடர்ந்து குழந்தையை தீய சக்திகளின் தீங்கை விட்டும் பாதுகாப்பு வேண்டியும் தாயாள் பாடப்பட்டுள்ளது. அதாவது,

ஆராற்றும் சீராற்றும்
துஆ செய்மா சைத்தான விட்டு
பால் ஆட்டி தவுலவதுல
பயனைப் பெற்றுக் கொள்வாய் புத்திரியே
(ஆராரோ)
இவ்வுலகில் சீராய் தீனைத் தன்தோனே
சிறப்பாய் அல்லாஹ்வ வேண்டி
நித்தம் புகழ்வாய் என்மகளே
பஞ்ச வர்ணத் தொட்டில் மீது
பாங்காய் அழுவாய் மகளே
(ஆராரோ)

எனும் வரிகள் குழந்தை படிப்படியாக வளர்ந்து வர எத்தகைய தடையும் இருக்கக் கூடாது என்று சைத்தானின் (தீய சக்தி) தீங்கை விட்டும் பாதுகாப்பு தேடுவதாக அமைந்துள்ளது. மேலும் இவ்வுலகில் அனைத்தையும் படைத்து பரிபாலிப்பவனான அல்லாஹ்விடம் தனது பிள்ளைக்கான தீனை (வேதம்) சிறப்பாக வழங்க வேண்டும் என்றும் வேண்டிப் பாடுகிறாள்.

இத்தாலாட்டுப் பாடலின் அடுத்த வரிகள் தனது குழந்தை எதிர்காலத்தில் எவ்வாறு வளர வேண்டும் என்ற தாயின் உயர் எண்ணத்தை எடுத்துக்காட்டியுள்ளது. அதாவது, ஊராள வேண்டும் என்றும், அரசாள வேண்டும் என்றும் கூறுகிறாள். இதனூடாக பிள்ளையை சிறு வயதில் இருந்தே அவளுடைய எதிர்காலத்தை திட்டமிடுவதற்கான மனோநிலையை தாய்மை ஏற்படுத்துவதைக் காணலாம். இன்னுமொரு தாலட்டுப் பாடலில் பின்வருமாறு பாடப்பட்டுள்ளது.

"ஆராரோ ஆராரோ
ஆரிரோ ஆராரோ
(ஆராரோ)
பாலுக்கு அழுகிறதோ - நீ
பாலுக்கு அழுகிறதோ
தேனுக்கு அழுகிறதோ – நீ
தேனுக்கு அழுகிறதோ
நித்திரை செய் மாணிக்கமே
(ஆராரோ)
உறங்கி முடித்த பின்னே – நீ
கேட்டபடி நான் தருவேன்
என் மகளே – நீ
நித்திரை செய் புத்திரியே"
(ஆராரோ)

இத்தாலாட்டானது தன் குழந்தை அழுவதற்கான காரணத்தை குழந்தையிடமே கேட்டு அறிந்து கொள்வது போல் பாடப்பட்டுள்ளது. நித்திரை விட்டு எழுந்த பின்னர் குழந்தை கேட்டவற்றைத் தருவதாக குழந்தையிடம் கூறி சமாதனப்படுத்துவதாக அமைந்துள்ளது. இத்தாலாட்டுப்பாடலானது சிறிய வடிவில் அமையப்பெற்றுள்ளது.

நாட்டார் பாடல்களில் கதைவடிவில் அமையப்பெறுவது ஒரு வடிவமாகும். இதனைக் கதைப்பாடல் என்று கூறுவர். அந்த அமைப்பில் சில தாலாட்டுப்பாடல்களும் காணப்படுகின்றன. தாலாட்டுப் பாடலில் குழந்தை அழுவதாகவும் யார் அடித்து அழுகிறாள் என்றும் கேள்விகளை எழுப்பிப் பாடப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். அதாவது,

"ஆராரோ ஆரிவரோ
ஆரடித்து நீ அழுதாய்
கண்மனியே கண்ணுறங்காய்
அடித்தாரை சொல்லி அழு
ஆய்ச்சினைகள் பன்னிவைப்பேன்

(ஆராரோ)
அத்தை அடித்தாளோ
அமுதூட்டும் கையாலே
மாமன் அடித்தானோ
மகிழ்ந்தெடுக்கும் கையாலே
அண்ணன் அடித்தானோ
அணைத்தெடுக்கும் கையாலே
பாட்டி அடித்தாளோ
பாலூட்டும் கையாலே
(ஆராரோ)
மரகத தொட்டிலிலே
கண்மணியே கண்தூங்கு
மாணிக்க படுக்கையிலே
மகிழ்வாகத் தூங்கிடுவாள்
என் செல்லக் கிளியே"
(ஆராரோ)

எனும் இப்பாடல் குழந்தைக்கு யாரோ அடித்ததால்தான் குழந்தை அழுகுறது என்று தாய் பிள்ளையிடம் கேட்கிறாள். உறவினர்கள் அடித்திருப்பார்களா? என்று வினா எழுப்பி, அதற்கு வாய்ப்பில்லை என்பதனைக் கூறி பாடலை தொடர்கிறாள். உறவினர்களின்; மகிமையினை கதைப் பாடல் அமைப்பில் கூறியுள்ளதை அவதானிக்கலாம். உறவினர்கள் ஒருபோதும் குழந்தைக்கு கேடு விளைவிக்க மாட்டார்கள். இருந்தாலும், பிள்ளையின் அழுகையை நிறுத்துவதற்காக இவ்வாறு பாடலை நகர்த்திச் செல்கிறாள். இத்தாலாட்டுப் பாடல் தொட்டிலிலே போட்டு ஆட்டும் போது பாடப்படும் பாடலாகவே அமைந்துள்ளது.

தாலாட்டுப்பாடல்கள் பெண் குழந்தைக்கு தனியாகவும் ஆண் குழந்தைகளுக்கு தனியாகவும் மற்றும் சில பாடல்கள் இருபாலாரினருக்கும் பொருந்தக்கூடிய வகையில் அமைந்து காணப்படுகின்றன. இதற்கு முன்னர் நோக்கப்பட்ட பாடல்கள் பெண் குழந்தைக்கான பாடல்களாகக் காணப்பட்டன. பின்வரும் பாடல் ஆண் குழந்தைக்குப் பாடப்பட்ட பாடலாக அமைந்துள்ளது. அதாவது,

"ஆராரோ ஆராரோ
ஆரிரோ ஆராரோ
(ஆராரோ)
அவனியல்லால் வேறாரோ
சீராயுலகம் படைத்தோனே
சிறப்பாம் அல்லாவெனினாமம்
நேராய்க் கல்பில் வைத்தோதி
நினைவாய் உறங்குமென் மகனே
ஆராரிவாராய் புகழ்ந்தாலும்
எல்லா அல்லாதனக்காகும்
நேரம் தினை தந்தோனை
நித்தம் புகழ்வா யென்மகனே

(ஆராரோ)
செவ்வாய் நபி மீது ஸலவாத்தை
செல்வம் பெருகி மிடைதீரும்
எல்லாம் அவர்கள் ஒளிர்வாலே
அல்லா படைத்தான் என் மகனே
தூங்கும் தொட்டிலில் ரஹ்மான்
தன்னை ரித்தம் மறவாமல்
பாங்காய் கவியை கேட்டறிந்து
புலன் நீ பெறுவா யென்மகனே
(ஆராரோ)
அவ்ரில் பொருளும் பட்டனமும்
எல்லாம் உனக்கே கிடைத்தாலும்
நீரின் குமுழி போல் ஒழ்யும்
நிலைக்கும் நல்ல அமல்களே
துன்யா வாழ்க்கை கனவைப் போல்
துன்பமுடனே தூதரும்
மனவாய் வெறுத்தால் அழியாது
வாழ்வாய் பெறுவாய் என் மகனே (ஆராரோ)

இவ்வாறு ஆண் குழந்தைகளுக்கும் அழகான கருத்து வளம் மிக்க பாடல்கள் தாலாட்டாகப் பாடப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். ஒவ்வொரு பந்தியிலும் என் மகனே என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதை ஆண் குழந்தைக்கான பாடலாக அமையாளப்படுத்தலாம். மேலும் இத்தாலாட்டுப் பாடலில் இஸ்லாமியத் தத்துவங்கள் அழகாகச் சொல்லப்படுகின்றன. குழந்தைகளுக்கு அவர்களின் சின்ன வயதிலேயே சமயக் கருத்துக்களையும், ஒழுக்கத்தினையும், ஊட்டுவதற்கு தாயானவள் தாலாட்டுப் பாடலை ஒரு சிறந்த ஊடகமாகப் பயன்படுத்துகிறாள். இஸ்லாமியர்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ள அடிப்படைச் சமயக் கோட்பாடுகள், இறையச்சம், ஒழுக்கக் கட்டுப்பாடு என்பன சூட்ஷமான முறையில் இத்தாலாட்டில் இடம் பெற்றுள்ளதை அவதானிக்கலாம். மேலும் நாம் வாழ்வில் உயர்வு பெற்றாலும் அல்லாஹ்வை அஞ்சி, நல்ல அமல்களை கடைபிடித்து வாழ வேண்டும். அதுவே எமக்கு உயர்வைத் தரும் என்று குழந்தைக்கு மார்க்க அறிவை மிகவும் எளிமையாகக் கூறுகின்றாள்.

மேலும் பொய்யும், புறமும் இன்றி பொறுமையுடன் வாழவேண்டும் என்றும், உலகத்தில் பொருளும், பட்டனமும் கிடைத்தாலும் நல்ல அமல்களுடன் வாழ வேண்டும். துன்யா வாழ்க்கை (உலக வாழ்க்கை) கனவைப் போன்றது என்று கூறி முஹம்மது நபி போல் வாழ வேண்டும் என்று இறுதியில் கூறி குழந்தையை தூங்கச் செய்கின்றாள்.

இதுபோன்று முஸ்லிம்கள் மத்தியில் காணப்படும் மேலும் சில தாலாட்டுப் பாடல்கள், இஸ்லாமிய சமயக் கருத்துக்களைத் தழுவியதாகவும் சமயத்தைப் போதிப்பதாகவும் அமைந்துள்ளன. பின்வரும் பாடலும் அவ்வாறு அமையப்பெற்ற ஒரு தாலாட்டுப் பாடலாகும்.

"ஆரார ராரரோ
ஆரிவ ரா ராரோ
வாழ்வில் வல்ல யா ரஹீமான்
தந்த செல்வம் - நீ யாரோ
(ஆரார ராரரோ)
தேனாகும் திருக்குர்ஆன்
தெவிட்டாத அமுதாகும்
கோமானான் நபி பெருமான்
கொடையான வழிகோலும்
ஈமானின் சுடரொழியாம்
இகமீது வாழ்வாயே
வாழ்வில் வல்ல ரஹ்மான்
தந்த செல்வம் நீ யாரோ
(ஆரார ராரரோ)
கண்ணனா கண்மணியே
கற்றோரும் போற்றிடவே
பொன்னோடு புருயாவும்
பொங்கும் நற் பெருமையுடன்
வாழ்வாயே ஊழிநவன்
வழமோடு வைய மதில்
வாழ்வில் வல்ல யா ரஹ்மான்
தந்த செல்வம் நீ யாரோ
(ஆரார ராரரோ)

தன்னுடைய குழந்தையை 'வாழ்வில் வல்ல ரஹ்மான் தந்த செல்வம் நீ யாரோ' என்று வினாவோடு இத்தாலாட்டு ஆரம்பமாகிறது. புனித வேதமாகிய திருக்குர்ஆனை அமுதமாக ஓதுமாறும் நபிவழியில் வாழ்வினை அமைத்துக் கொள்ளுமாறும் தன் குழந்தைக்கு கூறி மார்க்கத்தின் கண் வாழுமாறு போதிக்கின்றாள். மேலும் இத்தாலாட்டின் இறுதி அடிகள் பின்வருமாறு அமையப்பெற்றுள்ளதை அவதானிக்கலாம்.

"கலைஜோதி உருவாவாய்
கலையாத மாண்புறுவாய்
நிலையான நீதிமகான்
நிறைவான் ஹஸன் ஹீஸைனாய்
புவிமீது வாழ்ந்தது போல்
புகழோடு வாழ்ந்திடுவாய்
வாழ்வில் வல்ல ரஹ்மான்
தந்த செல்வம் நீ யாரோ"
(ஆரார ராரரோ)

அதாவது, முஸ்லிம்களின் வரலாற்றில் இறுதி நபியின் பேரக் குழந்தைகளான ஹஸன், ஹஸைனார் அவர்கள் வாழ்க்கை முறையைப் பின்பற்றி அனைவரும் போற்றும்

வண்ணம் நற்குணத்துடன் வையகத்தில் வாழ வேண்டும் என்றும் தாய் பிரார்த்தனை செய்கிறாள்.

மேலும் ஒரு தாலாட்டுப்பாடல்கள் நான்கு அல்லது ஐந்து அடிகளை மட்டும் கொண்டு பாடப்பட்டுள்ளன. அதில் அதிகமான சொற்கள் குழந்தையை கொஞ்சுவதாகவே அமைந்திருக்கின்றன. மேலும் ஒரேவரி மீண்டும் மீண்டும் பாடலில் வந்துள்ளதைக் காணலாம். இப்பாடல் குழந்தையை தூங்க வைக்கும் நோக்கத்திற்காக மட்டும் ராகத்தோடு பாடப்பட்டுள்ளது எனலாம். ஏனெனில் ஏனைய பாடல்களைப் போன்று இதில் குழந்தைக்கு எடுத்துக் கூறும் விடயங்கள் அமையப்பெறவில்லை.

"ஆரிராரிராரோ
அமுத அன்பு மலரே
ஆரிராரோ ஆரிரரே
உறங்கு கண்மணி - என்
உறங்கு கண்மணி"
(ஆரிராரி ராரோ)

ஆண், பெண் குழந்தைகளுக்கு தனித்தனித் தாலாட்டுப் பாடல்கள் காணப்படுவது போல் இருபாலருக்கும் பொதுவான சில தாலாட்டுப் பாடல்களையும் காணக்கூடியதாகவுள்ளன. அந்தவகையில் எடுத்துக்காட்டாக பின்வரும் பாடலை நோக்கலாம்;

"ஆராரோ ஆராரோ
ஆரென்பது ஆராரோ
ஆராய்ந்து அரும்பொருள்
அறிந்துன்டு நித்திரைசெய்
(ஆராரோ ஆராரோ)
நித்திரை ஆகையில் - நிறைவில்
நினைப்பெதெல்லாம்
சீரப் பாதம் என்டு சிதரிவிட்டாய் - புத்திரியே
பல்லாங்கு ஆனதிலே நித்திரை மாயத்திலே
(ஆராரோ ஆராரோ)
எழுந்து சோது எடு புத்திரியே
ஆராட்டும் சீராட்டும்
துஆ செய்து அசைந்து ஆடும் - ஊஞ்சலிலே
நீ பாராட்டி தாவட்டத்தில் நித்திரை செய்"
(ஆராரோ ஆராரோ)

குழந்தையை தொட்டிலில் இட்டு ஆட்டி நித்திரை செய்யும் போதே இப்பாடல் அதிகம் பாடப்படுகிறது. இது இருபாலார்களுக்கும் பொதுவான ஒரு தாலாட்டாக அமைகிறது. ஏனைய தாலாட்டுப் பாடல்களை விட இப்பாடல் சற்று வித்தியாசமாகக் காணப்படுகிறது. அதாவது, குழந்தையானது தூங்குவதற்கு முன் பல குழப்படிகளைச் செய்கிறது. ஆனால் தூங்கி எழுந்தால் செய்த குழப்படிகளை மறந்து குழந்தை சந்தோசமாக

விளையாடுவதைக் காணலாம். அதனைக் குறிப்பிட்டுக் காட்டியே தாயானவள் இத்தாலாட்டை பாடுகின்றாள்.

மேலும் பிள்ளைக்கு கண்ணூறு வராமல் பாதுகாக்கவும், ஜின் சைத்தான் (தீய சக்திகள்) விட்டுப் பாதுகாக்கவும் திருக்குர்ஆன் வசனங்களை ஓதிவிட்ட தாகவும் குறிப்பிட்டுள்ளது. இத்தாலாட்டுப்பாடலான பல விடயங்களை எடுத்துச் சொல்வதைக் காணலாம். அதாவது சிறுவயதிலேயே குழந்தை களுக்கு மார்க்கக் கல்வி தாலாட்டிலேயே தாயாள் புகட்டப்படுவதைக் காணலாம்.

மற்றுமொரு தாலாட்டுப் பாடல் பின்வருமாறு அமையப் பெற்றுள்ளதைக் காணலாம். இப்பாடலிலும் பல சிறந்த கருத்துக்கள் குழந்தைக்குச் சொல்லப்படுவதை அவதானிக்கலாம். இத்தாலாட்டு சிறு சிறு சொற்களைக் கொண்ட அழகிய இசையுடன் பாடப்படுகின்றது. மேலும் அதிகமான தாலாட்டுப் பாடல்களின் ஆரம்பம் ஒரே விதமாகக் காணப்படுவதை அவதானிக்கலாம். ஆயினும் இத்தாலாட்டுப் பாடலின் ஆரம்பம் ஏனைய பாடல்களிலிருந்து வித்தியாசமானதாக அமைந்துள்ளது.

"சந்தனப் பாப்பா சாய்ந்தாடு
சாய மயிலே சாய்ந்தாடு
சவளமூக்கன் நீ சாய்ந்தாடு
சாய்ந்தாடு கண்ணே சாய்ந்தாடு

பஞ்ச வர்ண மெத்தையிலே படுத்துறங்கு
பவளக்கட்டில் தொட்டினிலே படுத்துறங்கு
மான்குட்டி ராஜா நீ சாய்ந்தாடு
சாய மயிலே சாய்ந்தாடு
(சந்தனப்பாப்பா)
சட்டலங்கா புட்டலங்கா வாங்கித்தரட்டுமா
சாதிக்கூடு மாதளங்கா வேண்டித் தரட்டுமா
பச்சரிசி குத்தி குத்தி தரணி மேல வெச்சி வெச்சி
பச்சரிசி குத்தி குத்தி தரணி மேல வெச்சி வெச்சி"
(சந்தனப்பாப்பா)

மேற்குறிப்பிட்டுள்ள தாலாட்டுப்பாடலில் சந்தனப் பாப்பா, சாய மயிலே, சவளமூக்கன், மான் குட்டி, கண்ணே எனப் பல பெயர்களைக் கொண்டு பிள்ளையை வர்ணிக்கப்பட்டுள்ளது. குழந்தையை உறங்க வைப்பதற்காக பல பொருட்களை வாங்கித் தருவதாகக் கூறி குழந்தையை உறங்க வைக்கின்றாள்.

இன்னொரு தாலாட்டுப் பாடல்; பின்வறுமாறு அமைந்துள்ளது. அதாவது குழந்தைகளுக்கு விளையாடுவது என்றால் அளாதியான ஒரு பிரியம். எனவே இங்கு விளையாட அழைத்து குழந்தையை தூங்க வைக்கும் தாயின் மதிநுட்பம் தெளிவாக விளங்குகின்றது. அதாவது,

"வாங்களே பாத்திமா விளையாடோம்
ஆத்தடி மண்ணால் சோறாக்கி

அவரங்கப் பூவால் கறியாக்கி
மினு மினு பூச்சாய் விளக்கேற்றி...
வாங்களே செல்ல மகள் விளையாடோம்”
(வாங்களே பாத்திமா)

இவ்வாறு பாடி தூங்கி எழுந்த பின் நாம விளையாடுவோம் என்று கூறுவதால் பிள்ளை அவசரமாக தூங்கி விடுவாள் என்று தாயின் எண்ணத்தையும், நம்பிக்கையையும் இப்பாடலில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்படும் ஆத்தடி மண், அவரங்கப் பூ என்பவை பிள்ளைகள் விளையாடும் போது பயன்படுத்தும் பொருட்களாகும். மேலும் ஒரு பாடலை நோக்குமிடத்து பின்வருமாறு அமைகிறது.

“ஆராரோ கண்ணே ஆராரோ....
பொன்னொழி எந்தன் ஆராரோ...
வல்லோன் அல்லாஹ் அருளாலே...
இந்த மண்ணில் நீயே பிறந்தாயே...
(ஆராரோ கண்ணே)
மாமறைப் போதனையை
தங்கச் செல்வம் நீ ஓதி நின்றே
மானிலம் உன் புகழை
தாங்க வஹ்மானை வேண்டி நின்றேன் கண்ணே;
உன்னை சீர்தூக்கித் தாலாட்டினேன்
செல்ல மகனே நீ வாழ்க
(ஆராரோ கண்ணே)
மாநபி வாழ்வினை
உங்கள் வாழ்நாளில் எந்நாளுமே
அன்புக் களஞ்சியமாய்
அன்புச் செல்வமே நீ வாழவே
பரிவோடு மேலாம் அறிவோடு
உந்தன் பாதைகள் சீராகவே
கண்ணே கனியே ஆராரோ
இந்த மண்ணே போற்ற நீ வாழ்க
(ஆராரோ கண்ணே)
பாரோங்க பேரோங்கவே
உள்ளம் சீராட்டிப் பாராட்டினேன்
நற்பேறு பதினாறுமே
வளமாய் எந்நாளும் நீ சூடியே தங்கமே...
உள்ளம் பாராட்டி தாலாட்டினேன்
வல்லோன் அல்லாஹ் அருளாலே
எந்தன் அன்பே அமுதே நீ வாழ்க
(ஆராரோ கண்ணே)

இத்தாலாட்டைப் பொறுத்தவரையில் வித்தியாசமான ஒரு தாலாட்டுப் பாடலாக அமைகிறது. அதாவது, ஆரம்ப காலங்களில் முஸ்லிம்கள் மத்தியில் பாரம்பரிய

சம்ரதாயம் ஒன்று காணப்பட்டது. தற்போதும் இவ்வழக்கு ஒருசில பிரதேசங்களில் பேணப்படுவதைக் காணலாம். அதாவது பிள்ளை பிறந்து நாற்பதாம் நாளில் குழந்தைக்கு நாற்பது என்று இந்நாளை விழாவாகக் கொண்டாடுவார்கள். அந்நாளில் குழந்தையை மிகவும் அழகாக அலங்கரித்து தொட்டிலில் தூங்க வைத்திருப்பார்கள். குழந்தைக்கு தாலாட்டு பாடுவதற்கு ஒருவரை வரவழைப்பர். பின்னர் அவர் குழந்தைக்கு தாலாட்டுப் பாடுவார். இப்பாடல் அவ்வாறு பாடப்பட்ட ஒரு தாலாட்டுப்பாடலாகும். இப்பாடலில் குழந்தையைப் பாராட்டிப் பாடியுள்ளதோடு இறைவனைப் புகழ்ந்தும் குழந்தையின் எதிர்காலத்திற்கு அருள் புரியட்டும் என்றும் வாழ்த்திப் பாடியுள்ளார்.

முடிவுரை

அந்தவகையில் பல கருப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு தாலாட்டுப் பாடல்கள் அமையப்பெற்றுள்ளன. ஆரம்ப காலத்தில் அதிகமான தாலாட்டுப் பாடல்கள் பாடப்படுவதாக பெரியோர்கள் குறிப்பிடுகின்றனர். ஆரம்பகாலத்தில் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தார்கள். அப்போது பிறந்த குழந்தைக்கு உற்றார் உறவினர் என்று பலர் இருந்தார்கள். அதில் தாயோ, சகோதரியோ, தாயின் தாயோ, தாயின் தங்கையோ, தந்தையின் தாயோ, வேறு ஒருவரோ குழந்தையை தூங்க வைக்க அல்லது அழும் குழந்தையை சாந்தப்படுத்த வார்த்தைகளைக் கோர்த்துக் கோர்த்துப் பாடலாகப் பாடினார்கள். அவை ஏட்டில் எழுதப்பட்டவையும் அல்ல இயற்றப்பட்டவையும் இல்லை. ஒருவர் பாடி செவி வழி கேட்டவையாக அல்லது அந்த நொடிப்பொழுது வார்த்தைகளைப் பிணைந்து பாடியவையாக இருக்கும். ஆனால் தற்காலத்தில் மிகக் குறைவான அளவே தாலாட்டுப் பாடல்கள் பாடப்படுகின்றன. அதற்குக் காரணம் காலப்போக்கில் ஏற்பட்ட சமூக மாற்றங்களாகும். இன்று நவீன இயந்திரங்களின் வருகை மனிதர்களை எல்லாவிதத்திலும் எளிமையாக்கி யுள்ளன. மனித வாழ்க்கையின் பாரம்பரியங்களை உள்ளங்கைக்குள் சுருக்கியுள்ளன. நவீனத்துவம் எனும் கோட்பாடு தாய்மையையும் இசையையும் பிணைத்துள்ளது. முன்பு தாலாட்டு நா வழியாகப் பாடப்பட்டன ஆனால் இன்று இலத்திரனியல் ஊடகங்களினூடாக இலகுவாக்கப்பட்டுள்ளன. சமூகத்தில் இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

இவ்வாறு முஸ்லிம்களிடையே காணப்படும் இத்தாலாட்டுப் பாடல்களில் இஸ்லாமியக் கருத்துக்ககள் பல கூறப்பட்டுள்ளன. அத்தோடு தமிழ் பாடல் போன்று சிங்கள மொழிப் பாடல்களையும் கண்டு கொள்ள முடிந்தது. எனவே தாலாட்டுப் பாடல்களில் குழந்தைகளுக்கு அறிவுரையாகவும், குழந்தைகளின் நலன் கருதி இறைவனைப் போற்றியும் குழந்தைகளின் உறவகளின் சிறப்புக்களைக் கூறி பாடப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

துணை நூற்பட்டியல்:

1. (நேர்காணல் முஹம்மது காஸிம் மத்தியச்சம் சித்தி ஆயிஷா, மீயல்லை, வயது – 98)
2. (நேர்காணல் ஹபீபுர் ரஹ்மான்,வெலிகம,வயது – 72)
3. (நேர்காணல்: என்.எம்.ஸித்தி ஸ_பைதா, (ஸ_ம்ரி தாயார்), திக்வெல்லை, வயது – 80)
4. (நேர்காணல் ஸித்தி ஸஹிரா, மீயல்லை, வயது – 82)
5. முத்துமீரான், எஸ்., இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் தாலாட்டுப் பாடல்கள், தேசிய பதிப்பகம், சென்னை. (2007)
6. முஸ்தபா, ஏ.ஸி.எம்., தேனருவியாம் மீயல்லை, ஒக்ஸ்போர்ட் பிரின்ட், குருணாகல். (2010)
7. லரீப் சுலைமான், இறக்காடத்தூர் பண்பாட்டுப் பாடல்கள், (2011)
8. லூர்த், தே., நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள், பாரவேள் பதிப்பகம், திருநெல்வேலி. (1968)
9. றமீஸ் அப்துல்லாஹ், கிழக்கிலங்கை கிராமியம், மல்லிகைப் பந்தல், கொழும்பு. (2001)
10. ஷம்ஸ், எம்.எச்.எம்., வளவையின் மடியில், எஸ். கொடகே சகோதர்கள் பிரைவேட், கொழும்பு. (2014)

References:

1. (Interviewed by Muhammad Qasim Madhyacham Siddi Aisha, Meyallai, Age – 98)
2. (Interview Habibur Rahman, Weligama, age – 72)
3. (Interview: N.M. Siddhi Sa_baitha, (mother of Samri), Thikvellai, age – 80)
4. (Interview Sidi Zahira, Meyallai, Age – 82)
5. Muthumiran, S., Lullabies of Sri Lankan Village Muslims, National Publishing House, Chennai. (2007)
6. Mustafa, A.C.M., Thenaruviyam Meillai, Oxford Print, Kurunegala. (2010)
7. Lareep Sulaiman, Cultural Songs of Dhangadathur, (2011)
8. Lourdes, T., Studies in Natar Jurisprudence, Baravel Publishing House, Tirunelveli. (1968)
9. Rameez Abdullah, East Sri Lanka Village, Mallikai Bandal, Colombo. (2001)
10. Shams, M.H.M., Lap of Valavai, s. Kotake Brothers Pvt., Colombo. (2014)

Copyright (c) Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.